Vlambaram - April 01, 2025 new.qxp_Vlambaram-Front 2025-03-31 6:25 PM Page 1

கனடாவின் மூத்த தமிழ் இதழ் | விளம்பரம்™ • VLAMBARAM™ | Canada's Oldest Tamil Newspaper

35ஆவது ஆண்டில் கனடாவின் மூத்த தமிழ் இதழ்

விளம்பரம்
VLAMBARAM

email: vlambaram@sympatico.ca | Tel: 416-282-8059 | www.vlambaram.com

நிதி: 35 | பாலம்: 07 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | April 01, 2025







# லிபரல் கட்சியின் புதிய தலைவர் மார்க் காணி

கனடாவின் பிரதமராக 2015 நொவெம்பரில் இருந்து பதவி வகித்த லிபரல் கட்சியின் தலைவரான ஜஸ்ரின் ரூடோ லிபரல் கட்சித் தலைவர் பதவியிலிருந்தும், கனடியப் பிரதமர் பதவியிலிருந்தும் விலகுவதாக 2025 ஜனவரி 6ஆம் திகதி அறிவித்ததைத் தொடர்ந்து லிபரல் கட்சி யின் புதிய தலைவரைத் தெரிவு செய்வது தொடர்பான விடயங்கள் லிபரல் கட்சியில் ஆரம்பமானது. அதைத் தொடர்ந்து ஜனவரி 30ஆம் திகதி லிபரல் கட்சித் தலைவர் தெரிவில் வாக்களிக்க 400,000 பேர் தகுதி பெற்றுள்ளனர் எனத் தெரிவிக் கப்பட்டது. பெப்ரவரி 22இல் லிபரல் கட்சித் தலைவர் தெரிவிற்குப் போட்டியிட Mark Carney, Chrystia Freeland, Karina Gould மற்றும் Frank Baylis ஆகிய நால்வரும் தகுதி பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பெப்ரவரி 24 மற்றும் 25ஆம் திகதிகளில் தலைவர் பதவிக்குப் போட்டியிடும் நான்கு வேட்பாளர்களுக்கும் இடையில் நடைபெற்ற விவாதத்தைத் தொடர்ந்து லிபரல் கட்சித் தலைவர் தெரிவிற்கான வாக்கெடுப்பு பெப்ரவரி 26ஆம் திகதி தொடக்கம் மார்ச் 9ஆம் திகதி மாலை 3மணிவரை நடைபெற்றது.

லிபரல் கட்சித் தலைவருக்கான தேர்தலில் வாக்களிப்போர் தமது விருப்பத்தை வரிசைக்கிரமத்தில் வாக்குச் சீட்டில் பதி விடலாம். தலைவர் தெரிவு கனடா முழுவதிலும் உள்ள 343 தொகுதியிலும் ஒவ்வொரு தொகுதியிலும் எல்லா வேட் பாளர்களுக்கும் விழுந்த மொத்த வாக்கு களும் 100 புள்ளிகள் எனக் கொண்டு ஒவ்வொருவருக்கும் விழுந்த வாக்கு எண்ணிக்கைக்கு ஏற்ப புள்ளிகள் வழங்கப் பட்டன. இதனால், எவ்வளவு வாக்குகள் இத்தேர்தலில் அளிக்கப்பட்டிருந்தாலும் வழங்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 34,300 புள்ளிகள் ஆகும். இதில் 17,151இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுபவரே தலைவராகத் தெரிவு செய்யப்படும் நிலை இருந்தது.

மார்ச் 09 இரவு லிபரல் கட்சித்தலைவர் தெரிவிற்கான வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டது. முதற்சுற்று வாக்குகளின் எண்ணிக்கையின் முடிவிலேயே 85.9%ஆன வாக்குகளைப் பெற்று மார்க் காணி லிபரல் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

சஸ்கச்சுவான் மாகாணத்தின் வடக்கில் இருக்கும் Desnethe-Missinippi-Churhcill River தொகுதியில் மார்க் காணி 100% வாக்குகளைப் பெற்றிருந் தார். மார்க் காணி குவிபெக் மாகாணத் தில் உள்ள Pierrefonds–Dollard


Prime Minister Mark Carney with members of the newly sworn-in Liberal cabinet
Thanks: Sean Kilpatrick/The Canadian Press

தொகுதியில்தான் ஆகக் குறைந்த வித்தி யாசத்தில் வென்றிருந்தார். இது லிபரல் கட்சியின் தலைவர் பதவிக்குப் போட்டி யிட்ட Frank Baylisஇனுடைய தொகுதி யாகும். இங்கு மார்க் காணி 60.24 புள்ளிகளையும், Frank Baylis 31.71 புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

Chrystia Freelandஇனுடைய தொகுதி யான ரொறொன்ரோவில் உள்ள University–Rosedale தொகுதியில் மார்க் காணி 82.99 புள்ளிகளையும், Chrystia Freeland 11.8 புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

முதலாவது சுற்று வாக்கு எண்ணிக்கை யிலேயே கனடா முழுவதும் உள்ள 343 தொகுதிகளிலும் தனித்தனியே மார்க் காணி 50இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. லிபரல் கட்சியின் தகவலின்படி, கட்சியின் உறுப்பினர்களாக 400,000 பேர் பதிவு செய்திருந்தாலும், அதில் 163,836 பேர் மட்டுமே தலைவர் தெரிவிற்கு வாக்களிக் கப்போவதாகப் பதிவு செய்திருந்தனர். அதிலும் 151,899 பேர் மட்டுமே வாக்களித் திருந்தனர். அதாவது லிபரல் கட்சியின் உறுப்பினர்களாகப்பதிவு செய்தவர்களில் 37.97%ஆனோரே வாக்களித்திருந்தனர்.

இத்தேர்தலில் வாக்களிக்காதோர் பெரும் பாலும் தலைவர் பதவிக்குப் போட்டியிடும் எண்ணத்துடன் வேட்பாளர்களால் சேர்க்கப் பட்ட உறுப்பினர்களாக இருக்கலாம். லிபரல் கட்சியால் தலைவர் பதவிக்கு போட்டியிட சமர்ப்பித்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்ட Ruby Dhalla, தான்மட்டுமே 100,000க்கும் மேற்பட்டோரை கட்சியின் உறுப்பினராக சேர்த்திருந்ததாக ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

ஒட்டாவாவில் உள்ள Rogers Centreஇல் நடைபெற்ற கூட்டத்தில் லிபரல் கட்சித் தலைவருக்கான முடிவுகள் அறிவிக்கப் பட்டன. அந்த அறிவிப்பைத் தொடர்ந்து மார்க் காணியின் மூத்த மகள் Cleo Carney தனது தந்தையாரை அறிமுகம் செய்து வைத்தார். Cleo, Harvard பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத் துறையில் பயிலும் இரண்டாம் வருட மாணவியாவார். மார்க் காணி தனது உரையில், "எனது பெற்றோர் ஆசிரியர் கள். அவர்கள் கடின உழைப்பு மற்றும் சகிப்புத் தன்மை ஆகியவற்றின் முக்கியத் துவத்தை வலியுறுத்தியவர்கள். எனது பயிற்சியாளர்கள் அர்ப்பணிப்புள்ள தொண்டராக இருந்தனர். அவர்கள் குழுவாக இயங்குதல், இலட்சியம் மற்றும் பணிவு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை எனக்குக் கற்றுக் கொடுத்தனர். கனடியர்கள் ஒரு நேர்மறையான தலைமைத்துவத்தை விரும்புகின்றனர். அதுவே ஒரு வலுவான பொருளாதாரத் தைக் கட்டியெழுப்ப உதவும். அதுவே நம்பகமான வர்த்தகப் பங்காளிகளுடன் புதிய வர்த்தக உறவுகளை உருவாக்க உதவும். எல்லாவற்றிற்கும் மேலாக நான் ஒரு நடைமுறைச் சாத்தியம் பற்றி சிந்திப்பவன் (Pragmatist). ஏதாவது சரியாகச் செயற்படவில்லை என்றால், அதை மாற்றுவேன். எனவே எனது அரசாங்கம், குடும்பங்கள், விவசாயிகள் மற்றும் சிறு வணிகம் மீதான நுகர்வோர் காபன் வரியை (Consumer Carbon Tax) உடனடியாக அகற்றும். அத்துடன் மூலதன ஆதாய வரி உயர்வையும் (Captial Gain Tax) நிறுத்தும். இதன்மூலம் வீடுகள் அமைக்கும் நிறுவனங்கள் சந்திக்கும் சவால்களுக்கு ஊக்கம் கிடைக்கும். கனடாவிற்கு இதுபோன்ற மாற்றங்கள் தேவை" எனத் தெரிவித்தார்.

Mark Joseph Carney கனடாவின் வட மேற்குப் பிரதேசத்தில் உள்ள Fort Smith என்ற இடத்தில் 1965ஆம் ஆண்டு மார்ச் 16ஆம் திகதி பிறந்தார். அவரது தகப்பனார் James Martin Carney உயர்தரப் பாடசாலை அதிபர். அவரது தாயார் Verlie Margaret. மார்க் காணி Irish பரம்பரையைச் சேர்ந்தவர். அவர் 6 வயதாக இருக்கும்போதே அவரது குடும்பம் எட்மண்டன், அல்பேட்டாவிற்கு இடம்பெயர்ந்தது. அங்குதான் அவரது மூன்று சகோதரங்களுடன் அவர் கல்வி பயின்றார். அவர் Harvard பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத்தில் 1988இல் இளங்கலைப்பட்டம் பெற்றார். பின்னர் Oxford பல்கலைக்கழகத்தில் தத்துவவிய லில் (Philosophy) 1993இல் முதுமானிப் பட்டமும் 1995இல் முனைவர் பட்டமும் பெற்றார். அவர் பல்கலைக்கழகத்தில்

தொடர்ச்சி 05ஆம் பக்கம்










GTA Square, 5215 Finch Ave. E., #201, Toronto, ON M1S 0C2, Canada. Tel: 416.282.8059 | Fax: 416.286.0334, Email: vlambaram@sympatico.ca, info@vlambaram.com. Web: www.vlambaram.com

# House for Sale / Lease / Condo / BSMT

## House for Sale

Detached House
3BR + 1BR BSMT
Asking $899 K
Separat Entrance

Morningside / Finch

George Paranthaman**
Call : 416 277 9044

## Condo for Rent

1 BR. Northyork
Tridel Building

Laminated
Floor $1850

Vivek Dani *
Call : 416 627 5721

## Condo For Sale

Downtown Toronto
Condo for Sale

300 Front Street
2BR + 2WR Parking
$935,000

Deepak Dani **
Call : 416 930 9733

## Office Unit for Sale

GTA Square
Finch Avenue /
Middlefield
Main Floor Unit
Busy Mall
Under ground Parking

$279k

Matt Nadarajah*
Call : 416 960 6130

## Condo for Rent

2BR / 2WR
805 SF

Pickering $2550

Casey Woo *
Call : 647 801 6770

## Condo For Rent

2BR + 2WR + Parking

Kennedy / HWY401

Tridel Building

Deepak Dani **
Call : 416 930 9733

## For Rent

Town House for Rent

3 Level 3BR + 1 BR

3 Wash Rooms
Keele / Downsview

Kumar Sinnathamby*
Call : 416 576 4357

To
Join
HomeLife/GTA
Realty Inc.
Call at
416 321 6969

*One of the Best Brokerage in East Toronto.*

## House for Sale

Detached 2 Storey
4BR + 1 BR
5 WR
Over 2000 SF

Markham
(14th AVE / 9th Line)

Amal Joseph *
Call : 416 300 8294

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2

* Sales Rep.
** Broker

**Tel: 416-321-6969**

* Independently owned and operated.

Vlambaram - April 01, 2025 new.qxp_Vlambaram-Front 2025-03-31 6:25 PM Page 3





Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

4 1 6 7 0 4 1 2 0 0

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# இருமுகம் காட்டும் சிங்களக் கட்சிகள்

## – அரவின் –

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்காக, ஐக்கிய மக்கள் சக்தி குரல் கொடுக்க ஆரம்பித்திருக்கிறது.

2019 நாடாளுமன்றத் தேர்தலுடன், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அதிகாரபூர்வமாக பிளவுபட்டு உருவானதுதான், ஐக்கிய மக்கள் சக்தி.

சஜித் பிரேமதாசவின் தலைமையிலான அந்த அணி வெளியேறியதும் ஐக்கிய தேசியக் கட்சி நலிந்து போய்விட்டது.

2019 மற்றும் 2024 பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியால், இழந்துபோன வலிமையை மீளப்பெற முடியவில்லை. அதேவேளை, நாங்கள்தான் உண்மையான ஐக்கிய தேசியக் கட்சி என உரிமை கொண்டாடக்கூடிய வகையில், ஐக்கிய மக்கள் சக்தி பலமான ஒன்றாகவே இருந்து வருகிறது.

ஆனாலும், அண்மைய தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தியின் திடீர் எழுச்சி இந்த இரண்டு கட்சிகளையும் தடுமாற வைத்திருக்கிறது. எதிர்காலம் குறித்து அவர்களை மீளாய்வு செய்யும் நிர்ப்பந்தத்திற்கும் உள்ளாக்கி இருக்கிறது. இதனால், உள்ளூராட்சித் தேர்தலில் இரண்டு கட்சிகளும் இணைந்து வேட்பாளர்களை நிறுத்துவது தொடர்பாக பேச்சுக்களை நடத்தியிருந்தன.

பல கட்டங்களாக நடத்தப்பட்ட இந்தப் பேச்சுக்களில் சில விடயங்களில் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தாலும், எந்த சின்னத்தில் போட்டியிடுவது என்ற விடயத்திலும், யாரைத் தலைவராக ஏற்றுக் கொள்வது என்ற விடயத்திலும் இறுதியான இணக்கப்பாடு எட்டப்படவில்லை.

ரணில் விக்கிரமசிங்க விட்டுக்கொடுப்புடன் நடந்து கொண்டிருந்தால், அவரால் ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்தியிருக்க முடியும். அவர் கட்சியின் தலைவராக, எதிர்க்கட்சித் தலைவராக, பிரதமராக, ஜனாதிபதியாக என நீண்டகாலம் உயர் பதவிகளில் இருந்து விட்டார்.

கட்சித் தலைமையை சஜித் பிரேமதாசவுக்கு விட்டுக்கொடுத்திருந்தால், இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்திருக்கக்கூடிய அல்லது கூட்டாகப் போட்டி இடவோ கூடிய சூழல் ஏற்பட்டிருக்கும். ஆனால், ரணில் விக்கிரமசிங்கவுக்கு இன்னமும் பதவி ஆசை விட்டுப் போகவில்லை.

இப்பொழுதுகூட, தேசிய மக்கள் சக்தி நாட்டைக் கொண்டு நடத்த முடியாமல் போனால், அரசாங்கத்தைப் பொறுப்பேற்று நடத்துவேன் என வெளிப்படையாகக் கூறாவிட்டாலும், தனது கட்சியின் பிரமுகர்களை வைத்து, அப்படிக் கூற வைத்துக் கொண்டிருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற முடியும் என்ற நம்பிக்கை இனிமேலும் அவருக்கு இருப்பதற்கு வாய்ப்பில்லை. அதனால் அவர் குறுக்கு வழியில் வந்துவிழும் பதவியை ஏற்றுக் கொண்டு, மீண்டும் ஒருமுறை ஜனாதிபதிப் பதவிக்கு வரலாம் என ஆசைப்படுகிறார்.

இரண்டு கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது பற்றி பேச்சுக்களில் முட்டுக்கட்டை ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் தான் அல்ஜசீரா தொலைக்காட்சியின் பொறியில் போய் சிக்கியிருந்தார் ரணில் விக்கிரமசிங்க.

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை விவகாரம் அந்தச் செவ்வியின்போது, கேட்கப்பட்டது.

இதனால், இனிமேல் அவருடன் கூட்டுச் சேர்ந்தால் தங்களுக்கும் வாக்குக் கிடைக்காது என்ற ரீதியாக சஜித் பிரேமதாச ஒதுங்கிக்கொள்ளும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

பட்டலந்த வதைமுகாம் இயங்கியபோது, ரணில் விக்கிரமசிங்கவே அதனை மேற்பார்வை செய்தார் என்ற குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டாலும், அப்பொழுது ஜனாதிபதியாக இருந்தவர் சஜித் பிரேமதாசவின் தந்தை ரணசிங்க பிரேமதாச.

அவர் ஜேவிபியின் கிளர்ச்சியை ஒடுக்குவதில் மிகத் தீவிரமாக செயற்பட்டவர். அவரின் ஆசீர்வாதத்துடனேயே ஏராளமான படுகொலைகள் இடம்பெற்றன. இவ்வாறான நிலையில் ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டுச் சேர்ந்தால் தனது தந்தையின் கடந்தகால வரலாற்றைக் கிளறுகின்ற சூழலும் ஏற்படலாம் என்பதால், அவரிடம் இருந்து சஜித் பிரேமதாச ஒதுங்கிக் கொள்ள நினைக்கிறார்.

அண்மையில் மகிந்த ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் கூட்டுச் சேர்ந்து சஜித் பிரேமதாச ஒரு கூட்டணியை உருவாக்கப் போகிறார் என வதந்திகள் உலாவின. உடனடியாகவே, அதனை நிராகரித்தார் சஜித் பிரேமதாச.

இது இந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றியைத் தடுக்கும் நோக்கில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்ற வதந்தி என்று சஜித் பிரேமதாச கூறியிருந்தார். தான் ஒருபோதும் இவர்களுடன் கூட்டுச் சேரப் போவதில்லை எனவும் அறிவித்திருக்கிறார்.

மகிந்த ராஜபக்சவுடன் கூட்டுச்சேர்வது பற்றிய விடயங்கள் ஒரு பக்கம் இருக்க, ரணில் விக்கிரமசிங்கவுடன் அவர் கூட்டணி சேருவதற்கு விரும்பியோ விரும்பாமலோ பேச்சுக்களை நடத்திக் கொண்டிருந்தார் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், இப்பொழுது அவர்களுடன் கூட்டுச் சேரப் போவதில்லை எனக் கூறியிருக்கிறார். அதற்கு முக்கிய காரணம், பட்டலந்த வதைமுகாம் விவகாரம்தான்.

அதேவேளை, பட்டலந்த வதைமுகாம் தொடர்பான விவகாரம் அண்மையில் சூடுபிடிக்கத் தொடங்கியதும் ரணில் விக்கிரமசிங்கவை நியாயப்படுத்திப் பேசியவர்களில் அல்லது அவரைக் காப்பாற்றும் விதத்தில் பேசியவர்களில், ஐக்கிய தேசியக் கட்சியினரைவிட ஐக்கிய மக்கள் சக்தியினரே அதிகம்.

ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள் தொடர்பாக விமர்சனங்கள் இருந்தாலும், அவர் அல் ஜசீரா தொலைக்காட்சி நேர்காணலில், நாட்டைக் காட்டிக் கொடுக்காமல் நடந்து கொண்டார் எனப் பெருமையுடன் பேசி இருந்தார் நாமல் ராஜபக்ச.

அவர் ஏன் அவ்வாறு குறிப்பிட்டார் என்றால், அல் ஜசீரா தொலைக்காட்சி செவ்வியில் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், ஊழல் மோசடிகள், தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகள் எதற்குமே ரணில் விக்கிரமசிங்க பிடிகொடுக்காமல் பதிலளித்திருந்தார். அல்லது பதில் அளிக்காமல் தவிர்த்திருந்தார்.

அந்த விடயங்களுக்கு அவர் பதிலளிக்கப் போயிருந்தால் ஒரு முன்னாள் ஜனாதிபதியாக, இவற்றை அவர் ஏற்றுக்கொண்டுவிட்டார் என்ற நிலை ஏற்பட்டிருக்கும்.

அந்தக் குற்றச்சாட்டுகளிலிருந்து அவர்கள் எல்லோரையும் ரணில் விக்கிரமசிங்க காப்பாற்றியிருந்தார்.

கடந்த 23ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான அஜித் பெரேரா கொழும்பில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தி இருந்தார்.

விடுதலைப் புலிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய அல் ஜசீரா தொலைக்காட்சி செயற்பட்டதாகவும், அதற்கமையவே ரணில் விக்கிரமசிங்கவிடம் கேள்விகள் எழுப்பப்பட்டதாகவும், தெரிவித்திருந்த அஜித் பெரேரா, அதே நிகழ்ச்சி நிரலுடன் தான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் செயற்படுகிறது என்ற குற்றச்சாட்டை முன் வைத்திருக்கிறார்.

நாட்டைப் பாதுகாத்த அரச படையினரை காட்டிக் கொடுக்கும் வகையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடந்து கொள்வதாக அவர் குற்றம்சாட்டியிருந்தார்.

அந்தளவுக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சர்வதேச ரீதியாக இலங்கைப் படையினரைக் காட்டிக் கொடுக்க, என்ன செய்தது என்பதை அவர் கூறவில்லை.

ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கை தொடர்பான வாய்மொழி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட போது, அதனை நிராகரித்தது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்.

போர்க்காலத்தில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பான சாட்சியங்களை சேகரிக்கும் பொறிமுறை இயங்கிக் கொண்டிருப்பது பற்றி, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். அதனை நிராகரித்த இலங்கை அரசாங்கம், வெளியகப் பொறிமுறை எதையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் கூறியிருந்தது.

அப்படியிருக்க படையினரைக் காட்டிக் கொடுக்கும் செயலில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஈடுபட்டிருப்பதாக, ஐக்கிய மக்கள் சக்தி திடீரென குற்றம் சாட்டியது, அனைவரையும் திகைப்புக்கு உள்ளாக்கியது.

அதற்கு காரணம் இல்லாமல் இல்லை. உள்ளூராட்சித் தேர்தலில், தேசிய மக்கள் சக்தியைத் தோற்கடிப்பதற்கே இந்த ஆயுதம் அவர்களால் கையில் எடுக்கப்பட்டிருக்கிறது.

அரச படையினரை சர்வதேசத்திடம் காட்டிக் கொடுக்கப் போவதாக ஒரு மாயையை உருவாக்க பார்க்கின்றனர்.

பிரித்தானியா அறிவித்துள்ள தடைகளும், அவர்களுக்கு வசதியான சூழலை ஏற்படுத்தக் கூடும். ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமோ அரச படையினரை பாதுகாப்பதில் உறுதியாக இருக்கிறது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரச படையினரை அவர்கள் விட்டுக் கொடுக்கப் போவதில்லை. அப்படி நடந்தால், அது அவர்களின் வீழ்ச்சிக்கே வழிவகுக்கும்.

எது எப்படியோ, யார் தேசபக்தர்கள் என்று மோதிக் கொள்ளும் நிலை சிங்கள அரசியல் தலைமைகள் மத்தியில் வந்திருக்கிறது. இந்தச் சூழலில், சிங்கள மக்கள் யாரை உண்மையான தேசபக்தர்களாக ஏற்றுக் கொள்கின்றனர். என்பதை, உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்துவதாக அமையும்.

விளம்பரம்
VLAMBARAM™
35ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

Vlambaram - April 01, 2025 new.qxp_Vlambaram-Front 2025-03-31 6:25 PM Page 5



# லிபரல் கட்சியின்.....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

படிக்கும் காலத்தில் Ice Hockey விளையாட்டு வீரராக இருந்தார்.



Mark Carney, newly elected Liberal Party of Canada leader
Thanks: Evan Mitsui/CBC

மார்க் காணி 13 வருடங்கள் Goldman Sachs நிறுவனத்தில் Boston, London, New York City, Tokyo மற்றும் Toronto நகரங்களில் பணிபுரிந்தார். 2003ஆம் ஆண்டில் இந்நிறுவனத்திலிருந்து விலகி அவர் Bank of Canadaவில் துணை ஆளுநராகப் பதவியேற்றார். ஒரு வருடத்திலேயே அவர் கனடாவின் நிதித்துறைக்கு மூத்த இணைத்துணை அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவர் பின்னர் 2008ஆம் ஆண்டிலிருந்து 2013ஆம் ஆண்டுவரை Bank of Canadaவின் ஆளுநராகப் பதவி வகித்தார். பின்னர் 2013ஆம் ஆண்டிலிருந்து 2020ஆம் ஆண்டுவரை Bank of Englandஇன் ஆளுநராகப் பதவி வகித்தார். Bank of England ஆரம்பித்த 1694ஆம் ஆண்டிலிருந்து பதவி வகித்த ஆளுநர்களில் முதலாவது பிரிட்டன் நாட்டைச் சேராதவர் மார்க் காணி என்பது குறிப்பிடத்தக்கது.


அப்போது அவரது சம்பளம் வருடம் ஒன்றிற்கு $844,000 அமெரிக்க டொலர் ஆகும். அப்போதைய பிரித்தானிய அரசு வழமையான ஆளுநர்களின் சம்பளத்தை விட $135,000 அமெரிக்க டொலர் அதிகமாக மார்க் காணிக்கு வழங்கியது. 2020ஆம் ஆண்டில் இருந்து 2024ஆம் ஆண்டுவரை மார்க் காணி ஜஸ்ரின் ரூடோ அரசாங்கத்திற்குப் பொருளாதாரத் துறையில் ஆலோசகராக இருந்தார்.

மார்க் காணி Oxford பல்கலைக் கழகத்தில் படிக்கும்போது பிரித்தானியாவைச் சேர்ந்த பொருளாதாரவியலாளரான Diana Foxஐ சந்தித்து 1994ஆம் ஆண்டு



Cleo Carney, the daughter of Mark Carney
Thanks: NurPhoto/Getty Images

ஜுலையில் திருமணம் செய்தார். இவர்கள் இருவருக்கும் நான்கு பெண் பிள்ளைகள் (Cleo, Sophia, Amelia & Tess). இவர்கள் கத்தோலிக்க மதத்தைப் பின்



பற்றுபவர்கள். மார்க் காணி Canada, British மற்றும் Irish நாடுகளின் குடியுரிமையைக் கொண்டிருந்தவர். கனடாவின் பிரதமராகப் பதவி ஏற்கும் முன்னர் British மற்றும் Irish குடியுரிமைகளை விட்டுவிடுவதாகக் கூறியிருந்தார்.

மார்க் காணி மார்ச் 9ஆம் திகதி லிபரல் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர் மார்ச் 14ஆம் திகதி கனடாவின் 24ஆவது பிரதமராக சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றார். கனடாவின் பிரதேசங்களில் பிறந்த முதலாவது கனடியப் பிரதமர், முனைவர் பட்டம் உள்ள இரண்டாவது கனடியப் பிரதமர் மற்றும் பொதுத்தேர்தல் ஒன்றிலுமே பங்கு பற்றாமல் நேரடியாகப் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது கனடியப் பிரதமர் என மார்க் காணி குறிப்பிடப்படுகிறார்.

மார்க் காணியுடன் சேர்ந்து 24பேர் மார்ச் 14ஆம் திகதி அமைச்சர்களாகப் பதவியேற்றனர். இவர்களில் 11 பேர் பெண்கள். இதற்கு முந்தைய ஜஸ்ரின் ரூடோவின் அமைச்சரவையில் 37 அமைச்சர்கள் இருந்தனர். இவ்வாறு அமைச்சர்களைக் குறைத்தபடியால் பல தற்போதைய அமைச்சர்கள் இரண்டு அமைச்சுகளுக்குப் பொறுப்பாக

| தலைமை வேட்பாளர் | விழுந்த மொத்த வாக்குகள் | மொத்த வாக்குகள் % | வழங்கப் பட்ட புள்ளிகள் | புள்ளிகள் % |
|---|---|---|---|---|
| Mark Carney | 131,674 | 86.84 | 29,256.91 | 85.9 |
| Chrystia Freeland | 11,134 | 7.34 | 2,728.57 | 8.0 |
| Karina Gould | 4,785 | 3.16 | 1.100.34 | 3.2 |
| Frank Baylis | 4,038 | 2.66 | 1.014.18 | 3.0 |
| மொத்தம் | 151,899 | 100.00 | 34,300 | 100.00 |

இருக்கின்றனர். மார்க் காணியின் அமைச்சரவையில் மூவர் புதியவர்கள். ஏனையோர் முன்னர் அமைச்சர்களாகப் பதவி வகித்தவர்கள்.


Mark Carney after his swearing in ceremony
Thanks: Tonv Caldwell /Postmedia


நீதி அமைச்சரும் கனடாவின் சட்டமா அதிபராகவும் ஹரி ஆனந்தசங்கரி பதவி ஏற்றார். அத்துடன் அவர் ஏற்கனவே பதவி வகித்த அரச-பூர்வீகக் குடிகள் உறவுகள் மற்றும் வடக்கு விவகார அமைச்சுப்பதவியையும் வைத்திருக்கிறார். அனிதா ஆனந்த் புத்தாக்கம், விஞ்ஞானம் மற்றும் தொழில்துறை அமைச்சராகப் பதவி ஏற்றார். கிறிஸ்டியா ஃப்ரீலண்ட் போக்குவரத்து மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சராகப் பதவியேற்றார்.



மார்க் காணி பிரதமராகப் பதவியேற்ற பின்னர் உரையாற்றும்போது, "கனடாவின் புதிய அரசாங்கம் கனடியர்களுக்கு என்ன முக்கியம் என்பதில் கவனம் செலுத்தும். நாங்கள் குறிக்கோள்களை நோக்கமாகக் கொண்டுள்ள அரசாங்கம், செயலில் கவனம் செலுத்துகிறோம். நாங்கள் உடனடியாக வேலை செய்யத் தொடங்குவோம்" என்றார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "நாங்கள் ஒருபோதும், எந்தவகையிலும், எந்த வடிவத்திலும் அல்லது எந்தவிதத்திலும் அமெரிக்காவின் ஒரு பகுதியாக இருக்க மாட்டோம். அமெரிக்கா கனடா அல்ல. நாங்கள் அடிப்படையில் மிகவும் வேறுபட்ட நாடு. கனடிய இறையாண்மைக்கு மரியாதை தந்தால் டொனால்ட் டிரம்பைச் சந்திக்கத் தயாராக இருக்கிறேன். அமெரிக்க அதிபர் ஒரு வெற்றிகரமான தொழிலதிபர் மற்றும் ஒப்பந்தங்களைச் செய்வதில் வல்லவர். பல தொழில்களில் நாங்கள் அவருடைய மிகப்பெரிய வாடிக்கையாளர். வாடிக்கையாளர்கள் மரியாதையை எதிர்பார்க்கின்றனர். மற்றும் சரியான வணிக முயற்சிகளில் அவர்களுடன் ஒன்றாக வேலை செய்யத் தயாராக இருக்கின்றனர்" என்றார்.

தற்போதைக்கு வாஷிங்டனுக்குச் செல்லத்


Mark Carney's swearing-in ceremony at Rideau Hall in Ottawa
Thanks: AFP

திட்டம் இல்லை எனக் கூறிய மார்க் காணி பிரதமராகப் பதவியேற்றதைத் தொடர்ந்து பிரித்தானியா மற்றும் பிரான்ஸ்


Mark Carney meets with King Charles
Thanks: CBC

நாடுகளுக்குப் பயணம் செய்தார். அந்தப் பயணங்களின்போது பிரித்தானியப் பிரதமர்


Mark Carney meets with France's president, Emmanuel Macron
Thanks: National Post

Keir Starmer, மன்னர் சார்ள்ஸ்ஐ பக்கிங்ஹாம் அரண்மனையிலும் மற்றும் பிரான்ஸ் நாட்டின் அதிபர் Emmanuel Macron ஆகியோரைச் சந்தித்தார்.


Mark Carney meets with British Prime Minister Keir Starmer on March 17, 2025
Thanks: Wikipedia

ஒன்பது நாட்கள் கனடியப் பிரதமராகப் பதவி வகித்த மார்க் காணி மார்ச் 23ஆம் திகதி கனடாவின் ஆளுநர் மேரி சைமனை சந்தித்து நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு கேட்டார். அதைத் தொடர்ந்து கனடிய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு அடுத்த கனடிய மத்திய அரசிற்கான பொதுத்தேர்தல் 2025 ஏப்பிரல் 28ஆம் திகதி நடைபெறும் என மார்க் காணி அறிவித்தார். லிபரல் கட்சி மார்க் காணி ஒட்டாவாவில் உள்ள Nepean தொகுதியில் எதிர்வரும் தேர்தலில் லிபரல் கட்சி வேட்பாளராகப் போட்டியிடுவார் எனத் தெரிவித்துள்ளது. Nepean தொகுதியில் 2015ஆம் ஆண்டிலிருந்து லிபரல் கட்சியினைப் பிரதிநித்துவப்படுத்தி வந்த நாடாளுமன்ற உறுப்பினர் Chandra Arya இனுடைய வேட்புமனு இம்முறை லிபரல் கட்சியினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இதற்கான காரணம் Chandra Aryaவிற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது எனக் கூறும் லிபரல் கட்சி அதை ஊடகங்களுக்குத் தெரிவிக்கவில்லை.

*Get in touch for your perfect home!*

**PUSHPA KANAGARAJAH**

SALES REPRESENTATIVE

**DIR: 647.786.3436**

pushpakana33@gmail.com



HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE/GTA REALTY INC.,
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED

5215 Finch Ave. E #203, Toronto, ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963 5215

Vlambaram - April 01, 2025 new.qxp_Vlambaram-Front 2025-03-31 6:25 PM Page 6



# வடக்கு தேர்தல்கள் திரிசங்கு நிலையில்?

**– முகிலன் –**

இலங்கையில் மே 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நிறைவடைந்து இருக்கிறது.

இந்தத் தேர்தலில், வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில், தமிழரசுக் கட்சி தனியாகப் போட்டியிடுகிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவுகளுக்குப் பிறகு, கூட்டமைப்பின் பழைய பங்காளி கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதற்கு, தமிழரசுக் கட்சி முயற்சி மேற்கொண்டது.

அதற்கான பேச்சுக்கள் முன்னெடுக்கப் பட்டபோதும், ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ் ஆகிய பங்காளிக் கட்சிகள் சங்கு சின்னத்தில் கூட்டணியாகப் போட்டியிடுவதில் உறுதியாக இருந்ததால், அந்த முயற்சி முளையிலேயே கருகி விட்டது. இதனால் தமிழரசுக் கட்சி தனித்தே போட்டியிடுகிறது.

எந்தவொரு பலமான கட்சியாக இருந்தாலும், தனித்து ஆட்சி அமைக்க முடியாதளவுக்கு, இலங்கையின் உள்ளூராட்சித் தேர்தல் முறை இருப்பதால், தமிழரசு கட்சிக்கும் சிக்கலான நிலை நீடிக்கிறது.

தேர்தலுக்குப் பின்னராவது கூட்டணி சேர வேண்டிய கட்டாயம் அதற்கு நிச்சயம் இருக்கும்.

என்னதான் வீம்பு பிடித்தாலும், உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைக்க வேண்டுமானால், தமிழரசுக் கட்சி விரும்பியோ விரும்பாமலோ, பல்வேறு தரப்புக்களுடன் கைகோர்க்க வேண்டிய நிலை வரும்.

தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சுமந்திரன், ஆரம்பத்தில் இதனைக் கூறியிருந்தாலும், பின்னர் நாங்கள் தனித்து ஆட்சி அமைப்போம் என்றார். பின்னர், அதற்கு முயற்சிப்போம் எனக் கூறி வருகிறார்.

ஆனால் தமிழரசுக் கட்சிக்கு கடந்தமுறை கிடைத்த அளவுக்குக்கூட, இந்தமுறை தனித்து ஆட்சி அமைக்கக்கூடிய சபைகள் கிடைக்குமா என்பது சந்தேகம்தான்.

அதேவேளை, ஒன்பது கட்சிகளுடன் கூட்டணி அமைக்கப் போவதாகக் கூறிய, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, கடைசியில் பங்காளிக் கட்சியாக இருந்த தமிழ்த் தேசியக் கட்சியையும் நீக்கிவிட்டு, புதிதாக சந்திரகுமாரின் சமத்துவக் கட்சியை இணைத்துக் கொண்டு தேர்தலை எதிர்கொள்கிறது.

இந்தத் தேர்தலில், பரந்தளவிலான கூட்டணியை அமைக்கும் சங்கு கூட்டணியின் கனவு மாத்திரம் கலையவில்லை.

உள்ளூராட்சி சபைகளுக்கு, இந்தக் கூட்டணி சமர்ப்பித்த பெரும்பாலான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டு விட்டதால், யாழ்ப்பாணத்தின் 15 சபைகளையும் கைப்பற்றுகின்ற கனவும்கூட, கலைந்து விட்டது.

இந்தச் சபைகள் அனைத்திலும் தமக்கு வெற்றி வாய்ப்பு இருந்ததாகக் கூறியிருக்கிறார் சித்தார்த்தன்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளில் 15 சபைகளில் போட்டியிடுவதற்கு சங்குக் கூட்டணி வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த போதும், யாழ்ப்பாண மாநகர சபை உள்ளிட்ட ஒன்பது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டு விட்டன. இதனால் ஆறு உள்ளூராட்சி சபைகளில் மாத்திரம், யாழ்ப்பாணத்தில் போட்டியிடுகிறது.

ஏனைய மாவட்டங்களிலும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்புமனுக்கள் பல நிராகரிக்கப்பட்டு இருக்கின்றன. இதற்கு எதிராக உயர்நீதிமன்றம் செல்லப் போவதாக அறிவித்திருக்கிறார் சித்தார்த்தன்.

புலம்பெயர் தமிழரின் பணத்தைக் குறிவைத்தும், சமூக ஊடக வெளிச்சத்தை வைத்தும், பிரபல்ய அரசியல் நடத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனின், இன்னொரு முகத்தை வெளிக்காட்டியிருக்கிறது இந்த உள்ளூராட்சித் தேர்தல்.

வடக்கிலும், கிழக்கிலும் போட்டியிடப் போவதாக அவர் அறிவித்தார். கட்டுப்பணம் செலுத்துவதற்குப் பணம் இல்லை என்றும் சமூக ஊடகங்களில் நாடகம் ஆடினார். பின்னர் பெரும்பாலான இடங்களில் வேட்புமனுக்களைச் சமர்ப்பித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 15 சபைகளில் போட்டியிட, அவர் சுயேட்சைக் குழுக்களை போட்டியில் நிறுத்திய போதும் பருத்தித்துறை நகரசபை தவிர்ந்த மற்றைய அனைத்தும் நிராகரிக்கப்பட்டு விட்டன.

அவை நிராகரிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே, வேட்புமனுக்களை குறைபாடுகளுடன் சமர்ப்பித்திருக்கிறார்.

கட்டுப்பணம் செலுத்துவதற்காக வெளிநாடுகளில் உள்ள தமிழ் மக்களிடம், வாங்கிய பணத்தைச் சுருட்டிக் கொள்வதற்காகவே அவர் அப்படி, வேட்புமனுக்களை நிராகரிக்கச் செய்தார் என்ற குற்றச்சாட்டு பலமாக இருக்கிறது.

இந்தத் தேர்தலில் பலமான கூட்டை அமைத்திருக்கும் கட்சி என்றால், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மாத்திரம்தான்.

அந்தக் கட்சியினால், நல்லூர் மற்றும் பருத்தித்துறைப் பிரதேசசபைகளுக்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டாலும், யாழ்ப்பாணத்தில் ஏனைய 15 சபைகளிலும் போட்டியிடுகிறது.

அந்தக் கட்சிக்கு இம்முறை பலம் சேர்க்கும் வகையில் சிறிகாந்தா-சிவாஜிலிங்கம் தலைமையிலான தமிழ் தேசியக் கட்சி, ஐங்கரநேசனின் தமிழ் தேசிய பசுமை இயக்கம், சட்டத்தரணி தவராசாவின் தலைமையிலான ஜனநாயக தமிழரசுக் கட்சி ஆகியன கூட்டணியாக இணைந்து போட்டியிடுகின்றன.

அத்துடன், நீண்டகாலம் தமிழரசுக் கட்சியிலும் பின்னர், தமிழ் மக்கள் கூட்டணியிலும் இணைந்திருந்த அருந்தவபாலனும்கூட, இம்முறை சைக்கிள் சின்னத்தில் தமிழ் காங்கிரசுடன் இணைந்து போட்டியிடுகின்றார்.

இதன்மூலம் இக்கூட்டணி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, சாவகச்சேரி, யாழ்ப்பாணம், நல்லூர் போன்ற பிரதேசங்களில் தனது பலத்தை அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி, தனித்துப் போட்டியிட முடிவெடுத்து, கடைசியில் அந்தரித்துப் போய் நிற்கிறது.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் முதல்வர் பதவியைப் பெற வேண்டும் என்பதற்காக, முன்னாள் மாநகர முதல்வர் மணிவண்ணன் தனித்துப் போட்டியிடும் முடிவை எடுத்தார். ஆனால், யாழ்ப்பாணம் மாநகரசபையில் மட்டுமன்றி, ஏனைய மூன்று சபைகளிலும், தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டு விட்டன.

இதனால் சங்கு கூட்டணியும் இல்லை, தேர்தலில் போட்டியிடவும் முடியவில்லை என்ற நிலைக்கு அக்கட்சி தள்ளப்பட்டிருக்கிறது. ஆயினும் வேட்புமனு நிராகரிப்புக்கு எதிராக உடனடியாகவே இந்தக் கட்சி உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருக்கிறது.

தமிழ்த் தேசிய கட்சிகள், தங்கள் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டது குறித்துக் கவலையுடன் இருக்கின்ற நிலையில், தேசிய மக்கள் சக்தி மற்றும் ஈபிடிபியினால் சமர்ப்பிக்கப்பட்ட, 17 சபைகளுக்கான வேட்புமனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச சபையில் மாத்திரம் வேட்புமனு நிராகரிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தை நாடி இருக்கிறது அந்தக் கட்சி.

யாழ். மாவட்டத்தில் 35 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ள சூழலில், தமிழ் காங்கிரஸ், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி என எல்லா தரப்புகளும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போவதாகக் கூறுகின்றன.

அப்படி நடந்தால் மே 6ஆம் திகதி, வடக்கில் பெரும்பாலான இடங்களில் தேர்தல் நடத்த முடியாத நிலைதான் ஏற்படும். அந்த மனுக்களை உயர்நீதி மன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டால், தேர்தலுக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்படும்.

அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால், வடக்கில் உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றும் கட்சிகளின் கனவும், திரிசங்கு நிலையில் சிக்கிக் கொள்ளும்.

கிழக்கைப் பொறுத்தவரையில் இம்முறை ஒரு புதிய கூட்டு உருவாக்கப்பட்டு இருக்கிறது. கிழக்கு தமிழர் கூட்டமைப்பு என்ற பெயரில், முன்னாள் இராஜாங்க அமைச்சர்களான வியாழேந்திரனும், பிள்ளையானும் இணைந்து கூட்டு ஒன்றை உருவாக்கியிருக்கின்றனர்.

உள்ளூராட்சித் தேர்தலில், பிள்ளையானின் கட்சிச் சின்னமான, படகு சின்னத்தில் இவர்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

அதையடுத்து புதிய திருப்பமாக, பிள்ளையானுடன், கருணா, 20 ஆண்டுகளுக்குப் பின்னர், உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டு, கூட்டுச் சேர்ந்திருக்கிறார்.

கிழக்கு மாகாணத்தில் ஆட்சியைக் கைப்பற்றுவதே தங்களின் நோக்கம் என இவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இப்புதிய கூட்டு உருவானது தொடக்கம்,

தொடர்ச்சி 8ஆம் பக்கம்

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
.Advanced function
.Calculus & vectors
.Data management
All Classes available in Scarborough & Stouffville

Mr.S.F.Xavier (Teacher)
Contact: 647.340.9490 / 416.732.2228

Vlambaram - April 01, 2025 new.qxp_Vlambaram-Front 2025-03-31 6:25 PM Page 7



# இந்திய நாடாளுமன்றத் தொகுதிகள் மறுசீரமைப்பு – தமிழ்நாடு தலைமேல் தொங்கும் கத்தி!

**கண்ணன்**

இந்தியாவில் நாடாளுமன்றத் தொகுதிகள், மக்கள் தொகையின் அடிப்படையில், ஒவ்வொரு பத்தாண்டுகளுக்கும் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும் என்கிறது, இந்திய அரசமைப்பு சட்டம். அதன்படி, அடுத்த ஆண்டு (2026) தொகுதி மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும். ஆனால், இன்றைய நிலையில் இதனால் தமிழ்நாடு உள்பட தென்னிந்திய மாநிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, தொகுதி மறுசீரமைப்பால் பாதிக்கப்படக்கூடிய மாநிலங்களின் முதலமைச்சர்கள், முக்கிய தலைவர்களின் கூட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சென்னையில் கடந்த மார்ச் 22ஆம் திகதி கூட்டினார். இதில், தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா, மேற்கு வங்கம், ஒடிசா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள், முன்னாள் முதல்வர்கள், முக்கிய கட்சித் தலைவர்கள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில், 'நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை மேலும் 25 ஆண்டுகளுக்கு மாற்றக்கூடாது' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்திற்குப் பிறகு மு.க. ஸ்டாலின் கூறியதுபோல், தொகுதிகள் மறுசீரமைப்பு தமிழ்நாட்டின் தலைமேல் தொங்கும் கத்தியர் அல்லது பாஜக தலைவர் அண்ணாமலை கூறுவதுபோல், அரசியலுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் 'கபட நாடகம்' ஆடுகிறாரா?

## எது உண்மை என்று பார்க்கும் முன்பு கொஞ்சம் வரலாறு;

இந்தியா சுதந்திரமடைந்தபின், ஒவ்வொரு பத்தாண்டுக்குப் பிறகும் நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை மறுசீரமைப்புச் செய்ய முடிவுசெய்யப்பட்டது. இதற்காக 1952ஆம் ஆண்டில் Delimitation Commission Act இயற்றப்பட்டது. இதன்படி ஒரு மக்களவைத் தொகுதியில் ஐந்து லட்சம் முதல் ஏழரை லட்சம்வரை மக்கள் தொகை இருக்கலாம். ஆனால், இந்தப் பிரிவு விரைவிலேயே திருத்தப்பட் டது. திருத்தத்தின்படி, ஏழரை லட்சம் பேருக்கு ஒரு மக்களவைத் தொகுதி என்ற வரையறை நீக்கப்பட்டது. இப்போது பல தொகுதிகளில் வாக்காளர்களின் எண்ணிக்கை 15 லட்சம்வரை கூட இருக்கிறது. தெலங்கானா மாநிலத்தில் உள்ள மல்கஜ்கிரி தொகுதியில் அதிகபட்சமாக 3,150,303 வாக்காளர்கள் இருக்கின்றனர்.




மீண்டும் 1952இற்குச் சென்றால் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 81(1)(டி) இன்படி, 1951ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் 1952ஆம் ஆண்டு முதன்முதலில் மக்களவை தொகுதி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டது. அப்போது இந்தியாவில் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை 494ஆக இருந்தது. இதனையடுத்து 1963ஆம் ஆண்டு மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு நடைபெற்றது. அப்போது மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கை 522ஆக அதிகரித்தது. தொடர்ந்து, 1971ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் 1973ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தொகுதி மறுசீரமைப்பின் போது தொகுதிகளின் எண்ணிக்கை 542 ஆக உயர்ந்தது. இதன் பின்னர் சிக்கிம் மாநிலத்தில் ஒரே ஒரு மக்களவைத் தொகுதி மட்டும் இணைக்கப்பட்டு இந்த எண்ணிக்கை 543ஆக அதிகரிக்கப்பட்டது.

1973இற்குப் பின்னர் 1983ஆம் ஆண்டு மக்களவைத் தொகுதிகள் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இந்தியாவின் மக்கள் தொகைப் பெருக்கத்தை கட்டுக்குள் கொண்டுவர செயல்படுத்தப்பட்ட, ஒன்றிய அரசின் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமல்படுத்துவதில் மாநிலங்களுக்கு இடையே ஏற்றத்தாழ்வு நிலவியது. குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைத் தென்னிந்திய மாநிலங்கள் சிறப்பாகச் செயல்படுத்தின. ஆனால், வட இந்தியாவில் சில மாநிலங்களைத் தவிர்த்து, மற்றவை இத்திட்டத்தில் முனைப்புக் காட்டவில்லை. எனவே, மக்கள் தொகை வளர்ச்சி வீதம் தென்னிந்திய மாநிலங்களில் குறைந்தது வட இந்தியாவில்



அதிகரித்தது. எனவே, மக்கள் தொகை அடிப்படையில் மீண்டும் தொகுதி மறுசீரமைப்பை அமல்படுத்தினால் தென்னிந்திய மாநிலங்களுக்கு தொகுதிகளின் எண்ணிக்கை குறையும், வடமாநிலங்களில் தொகுதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். அதாவது, மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய தென்னிந்திய மாநிலங்களுக்குத் தண்டனை, அதைச் செயல்படுத்தாத வட இந்திய மாநிலங்களுக்குப் பரிசு என்ற முரணான நிலை உருவானது. எனவே, தமிழ்நாடு உள்பட தென்னிந்திய மாநிலங்கள் இதை எதிர்த்தன.

எனவே, 1976இல் இந்தியாவில் நெருக்கடி நிலை அமலில் இருந்த காலகட்டத்தில், அன்றைய பிரதமர் இந்திரா காந்தி, மக்களவை எண்ணிக்கை மறுசீரமைப்பை 25 ஆண்டுகளுக்கு ஒத்தி வைத்தார். அதற்குள் சீரான மக்கள் தொகை வளர்ச்சி வீதம் சாத்தியமாகும் என்று நம்பப்பட்டது. ஆனால், அப்படி நடக்கவில்லை. ஆனாலும், 2001ஆம் ஆண்டு, மீண்டும் மக்களவைத் தொகுதிகள் எண்ணிக்கையை மறு வரையறை செய்வதற்கான பணிகளை மேற்கொள்ள அன்றைய பாஜக ஒன்றிய அரசு திட்டமிட்டது. ஆனால், அப்போது தமிழ்நாட்டைச் சேர்ந்த திமுக உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன்தான் அன்றைய வாஜ்பாய் தலைமையிலான பாஜக அரசு நீடித்தது. எனவே, திமுக அழுத்தம் காரணமாக, மீண்டும் 25 ஆண்டுகளுக்கு, அதாவது 2026ஆம் ஆண்டுவரை மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பைத் தள்ளிவைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

இப்போது, 2026 நெருங்கும் நிலையிலும், தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களுக்கும் வடமாநிலங்களுக்கும் இடையே மக்கள் தொகையில் சமவிகித நிலை இல்லாத பழைய நிலையே நீடிப்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, தென் இந்திய மாநிலங்கள் மக்கள் தொகை வளர்ச்சியை கட்டுக்குள்ளே வைத்து இருக்கும் நிலையில், வடஇந்திய மாநிலங்களில் இதற்கு நேர்மாறாக மக்கள் தொகை பெருக்கம் தொடர்கிறது. இந்தியாவில் 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்குப் பின்னர் 2021இல் நடைபெற்றிருக்க வேண்டிய கணக்கெடுப்பு கொரோனா பெருந்தொற்றால் ஒத்தி வைக்கப்பட்டது. எனவே, இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்த பின்னர் தான் ஒவ்வொரு மாநிலத்திலும் தற்போதைய மக்கள் தொகை வளர்ச்சி வீதம் தெரியவரும். என்றாலும், 2011 கணக்கெடுப்புப்படி, 1971-2011 இடைப்பட்ட காலத்தில் வட மாநிலங்களான உத்தரப் பிரதேசத்தில் 138%, ராஜஸ்தானில் 166% மக்கள் தொகை அதிகரித்தது. ஆனால், தென்னிந்திய மாநிலங்களான தமிழ்நாட்டில் 75%, கேரளத்தில் 56% மட்டுமே அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் செயல்படும் பெரிய வங்கிகளில் ஒன்றான பாரத ஸ்டேட் வங்கி, 24 செப்ரெம்பர் 2024 அன்று, 'Precursor to Census 2024: The Fine Prints of a Rapidly Changing Nation' என்ற ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில், 2024இல் இந்தியாவின் மக்கள் தொகை 138 - 142 கோடிக்குள் இருக்கும் எனக் குறிப்பிடப்படுகிறது. ஆனால், இந்த மக்கள் தொகை அதிகரிப்பில் தென் மாநிலங்களின் பங்களிப்பு 15இலிருந்து 12 சதவீதமாகக் குறையும் எனவும் வட மாநிலங்களின் பங்களிப்பு 27இல் இருந்து 29 சதவீதமாக அதிகரிக்கும் என்றும் இந்த அறிக்கை கூறுகிறது.

சர்வதேச அமைதிக்கான கார்னகி அறக்கட்டளை சார்பில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில், 'இந்தியாவில் 2026ஆம் ஆண்டு மக்களவைத் தொகுதி எல்லை மறுவரையறை மேற்கொள்ளப்பட்டால், சத்தீஸ்கர், டெல்லி, குஜராத், ஹரியானா, ஜார்கண்ட், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், பீகார், உத்தபிரதேசம் மாநிலங்களில் தொகுதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். அதிகபட்சமாக உத்தரப் பிரதேசத்துக்கு தற்போதைய தொகுதிகளான 80ஐ விடவும் கூடுதலாக 11 தொகுதிகள் சேர்த்து 91 தொகுதிகள் கிடைக்கும். பீகாருக்கு இப்போது உள்ள 40 தொகுதிகளுக்குப் பதில் 50 தொகுதிகள் கிடைக்கும். அசாம், மகாராஷ்டிராவில் இப்போதைய தொகுதிகளின் எண்ணிக்கை தொடரும். தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கேரளா, மேற்கு வங்கம், ஒடிசா, கர்நாடகா, இமாசலபிரதேசம், பஞ்சாப், உத்தரகாண்ட் மாநிலங்களில் தொகுதிகளின் எண்ணிக்கை குறையும்" என்று கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தொகுதி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டால் தமிழ்நாடு தனது 39 தொகுதிகளில் 8 தொகுதிகளை இழக்க நேரிடும் என்று ஆய்வுகள் கூறுகின்றன. 1957, 1962 மக்களவைத் தேர்தல்களின்போது தமிழ்நாட்டில் 41 மக்களவைத் தொகுதிகள் இருந்தன. 1973 தொகுதி மறுவரையின் போது இது குறைந்து 39ஆனது குறிப்பிடத்தக்கது. எனவேதான், மக்கள்தொகை

தொடர்ச்சி 11ஆம் பக்கம்



Vlambaram - April 01, 2025 new.qxp_Vlambaram-Front 2025-03-31 6:25 PM Page 8



## நாமும் நமது இல்லமும் 674

# சுங்கவரி: ஏப்ரல் 02, 2025



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

உலகின் அநேக நாடுகளுக்கு அமெரிக்கா ஏப்ரல் 02, 2025இலிருந்து 25% தொடக்கம் மேலான சுங்கவரியை அறவிட இருக்கின்றது என்பது ஏற்கனவே அறியப்பட்ட விடயம். கனடாவின் இன்றைய பிரதமர் மார்க் காணியின் (Mark Carney) கொள்கைகள் ஏற்கனவே இருந்த பிரதமரைவிட வித்தியாசமாக இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் மார்ச் 29, 2025 அன்று கனடியப் பிரதமர், அமெரிக்கத் தலைவருடன் தனது முதலாவது தொலைபேசியுடனான தொடர்பை ஏற்படுத்தியிருந்தார். அமெரிக்க அதிபர் - கனடியப் பிரதமர் உரையாடல் சுங்கவரியில் சில மாற்றங்கள் ஏற்படலாம் போலத் தெரிகின்றது.

எனினும், அமெரிக்க அதிபரின் நேரத்திற்கு ஏற்ப நிலை மாற்றத்தைக் கொண்டு எதனையும் உறுதியாகக் குறிப்பிட முடியாது.

இன்றைய நிலையில் கனடிய ஆதன வியாபாரம் ஓர் இறுக்கமான நிலையில் உள்ளது. இதனால், ஆதனச் சந்தையில் இருந்த பலர், தமது வாங்குகின்ற நிலைமையை பின்நோக்கிப் போட்டு இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. ஆனால், வட்டி வீதமும் குறைந்து, விலையும் குறைந்துள்ள இன்றைய நிலைமை ஆதனத்தில் முதலிடுவதற்கும் குறிப்பாக முதல் தடவையாக ஆதனம் வாங்குவதற்கும் சிறந்த நேரம். அத்துடன் குறிப்பாக இரண்டு வருமானம் தரக்கூடிய வீடுகளில், கீழ்ப்பகுதியை (Basement) இலகுவாக வாடகைக்குக் கொடுக்கக்கூடிய வீடுகளில் முதலிடுவது எதிர்காலத்தில் சிறப்பான பலனைக் கொடுக்கலாம்.

ஆனால், மக்களின் பொதுவான மனப்



பாங்கு பெரிய மக்கள் கூட்டத்தினை நோக்கி செல்வதிலேயே காணப்படுவதால், தகுந்த நேரத்தைத் தவறவிட்டு விடுவர் என்பதே என் கணிப்பு. அத்துடன் ஒன்ராறியோ அரசினால் கொண்டு வரப்பட்ட (Garden Suite) மேலதிக தனியான, வாடகைக்குக் கொடுக்கக்கூடிய மனை அமைத்தல் என்ற மனையும் மேலதிக வருமானத்தை பெற்றுக் கொடுக்கும். அதற்கேற்ற தகுந்த வீட்டில் முதலிடுவது சிறப்பாக அமையும். ஆனால், இன்றைய நிலைமையில் ஆதனம் வாங்குவதில் மக்களின் வாங்குவதற்கான மனப்பான்மை கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் இருந்ததனைவிட மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. குறிப்பாக ஆதனம் வாங்குவதில் இவ்வாறான மனப்பான்மையைக் காணக்கூடியதாக உள்ளது.

ரொறொன்ரோவின் அதிவிலைகூடிய வீடுகளைக் கொண்டுள்ள மத்திய பகுதியிலும் (Toronto's expensive area) ஆதனவிலை குறைந்துள்ளதனைக் காணக் கூடியதாக உள்ளது.

பொதுவாக இந்தப் பகுதியில் ஆதன விலையில் அதிக இறக்கம் ஏற்படுவதில்லை. ஆனால், இப்பொழுது நிலைமை மாறி உள்ளது.

ஏற்கனவே சொந்த வீட்டில் வாழ்வோர் தாம் இப்பொழுது இருக்கும் வீட்டைவிட வசதியான (Move up Buyers) வீட்டிற்கு இடம் மாறுவதனைப் பற்றியும் சிந்திக்கக் கூடிய காலமே இது.

### இன்றைய அடுக்குமனைகளின் நிலைமை:

அடுக்குமனைக் கட்டிடத் தொகுதிகளில் அநேகமான அலகுகள் விற்கப்படாமல் தேங்கி இருப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. அதாவது கட்டப்பட்டு முடிக்கப்பட்ட கட்டிடத்தில் விற்கப்படாமல் இருக்கும் மனைகளே Inventory Units என அழைக்கப்படும். இவையே அதிகமாகத் தேங்கியுள்ளன.

அத்துடன் ஏற்கனவே இந்தத் தொகுதிகளில் வாங்கியோரில் பலர் தமது மனையை கையில் எடுப்பதற்கே (உரிமை கொள்வதற்கு) சிரமமாக உள்ளது. அதற்கு முக்கிய காரணம், வாங்கிய போதிருந்த மனையின் விலையைவிட இப்பொழுது மிகக்குறைவாக (20% - 30%) காணப்படுகின்றது.

உதாரணமாக ரொறொன்ரோவின் விலை கூடிய பகுதியில் 2021இன் இறுதியில் அல்லது 2022இன் ஆரம்பத்தில் ஒரு சதுர அடி $2000இற்கு விற்கப்பட்டவை இப்பொழுது (15% - 20%) குறைவாகவே விற்கப்படுகின்றது.

அத்துடன் ஏறக்குறைய சதுர அடிக்கு $1200 விற்கப்பட்டவை இப்பொழுது ஏறக்குறைய $1000இற்குக் குறைவாகவே விற்கப்படுகின்றன.

இதனால் ஒரு சில அடுக்குமனைக் கட்டிடம் விற்கும் நிறுவனங்கள் வாங்குவோரிடம் அவர்களின் பொருளாதார நிலைமைக்கு ஏற்ப சில இலகுவான மாற்றங்களையும் செய்கின்றனர்.

இதுவரை இருந்த ஆண்டுகளில் இந்த வருடம் (2025) அதிகூடிய அலகுகள் (மனைகள்) கட்டி முடிக்கப்பட்டு, வாங்குவோரிற்குக் கையளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் அநேக முதலீட்டாளர்களே வாங்கியுள்ளனர். இதனால் அதிக மனைகள்/ சந்தைக்கு/ வாடகைக்கு வரும் என எதிர்பார்க்கலாம். வாடகையில் மேலும் இறக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கலாம். புதிதாக ஏப்ரல் 28, 2025 வர இருக்கும் புதிய கனடிய அரசு இதற்கேற்ப சில மாற்றங்களைச் செய்யலாம் என்பது எனது கணிப்பு.

# வடக்கு...

6ஆம் பக்கத்தொடர்ச்சி

சிக்கல்களுக்குக் குறைவில்லை.

முதலில் கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு என்ற பெயர் தொடர்பான சிக்கல் ஏற்பட்டது.

தம்பியப்பா கோபாலகிருஷ்ணன் தலைமையில் இயங்கிய கிழக்கு தமிழர் ஒன்றியத்தினால் உருவாக்கப்பட்ட அரசியல் கூட்டணியின் பெயர்தான், கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு.

சில ஆண்டுகளாகச் செயலிழந்து போய் இருந்த அந்த அமைப்பின் பெயரைத் திருடி, பிள்ளையான் - வியாழன் அணி கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு தங்களுடையது என அறிவித்தது.

இதற்கு எதிராக, சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக தம்பியப்பா கோபாலகிருஷ்ணன் அறிவித்திருக்கின்றார். அதற்குப் பிள்ளையான், அவரையும் வந்து தங்களுடன் இணையுமாறும், அப்படி வந்தால் அதிகாரம்மிக்க பதவி தருகிறோம் என்றும் கூறியிருக்கிறார்.

இத்தோடு பிரச்சினை முடிந்து போகவில்லை. பிள்ளையானுடன் கூட்டணியை அறிவித்த கையுடன், கருணாவுக்கு சோதனை வந்திருக்கிறது. அவருக்கு எதிராக பிரித்தானியா தடைகளை அறிவித்திருக்கிறது.

அதற்கு அடுத்த நாள், மணல் அள்ளுவதற்கான அனுமதியை வழங்க, 15 இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்றதாக, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் வியாழேந்திரன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

பிள்ளையான் ஏற்கனவே சிஐடியின் விசாரணை வளையத்தில் இருக்கிறார். அவரும் எந்த நேரத்திலும் கைது செய்யப்படக் கூடும்.

இவ்வாறான நிகழ்வுகள், இந்தக் கூட்டமைப்பின் எதிர்காலம் பிரகாசமானதாக இருக்குமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.


வன்னிச் சங்கம்-கனடா
ASSOCIATION FOR VANNI

வன்னியியல் ஆய்வு மன்றம் நடத்தும்
நூல் அறிமுக விழா
'நான் பார்த்த நந்திக் கடல்'




இடம்: வன்னிச் சங்க அலுவலக மண்டபம்
3500 McNicoll Ave.,Unit 8
Scarborough, On. M1V 4C7
காலம்: 13.04.2025 ஞாயிற்றுக் கிழமை
பி.ப. 3.00 - 6.00

தலைமை
திரு.சிவகுமாரன் இரத்தினசிங்கம் அவர்கள்
தலைவர், வன்னிச் சங்கம்
நிகழ்ச்சித் தொகுப்பு
கலாநிதி பார்வதி கந்தசாமி அவர்கள்
நிறுவனர், வசந்தம் உளவளத்துணை நிலையம்
நூலறிமுகம்
திருமதி வனிதாமணி வரதராஜா அவர்கள்
எழுத்தாளர், (குளவிசுட்டான்) கனடா
ஆய்வுரை
திரு. தங்கராசா சிவபாலு அவர்கள்
ஒருங்கிணைப்பாளர், வன்னியல் ஆய்வு மன்றம்,
நூலாசிரியர் அறிமுகம்
திரு. சபா இராசேஸ்வரன் அவர்கள்
பொருளாளர் வன்னிச் சங்கம்
நூலாசிரியர் ஏற்புரை
திரு.பொன்.புத்திசிகாமணி அவர்கள்
எழுத்தாளர், முன்னாள் தகவலாளர் வீரகேசரி
நன்றி உரை
திரு.சிவபாதம் இரத்தினாகரன் அவர்கள்
செயலாளர், வன்னிச் சங்கம்

வன்னிச் சங்கம்- கனடா
தொடர்புகளுக்கு: TP:416-644-1113
Email:info@vcarekids.com



யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

Vlambaram - April 01, 2025 new.qxp_Vlambaram-Front 2025-03-31 6:25 PM Page 9









## சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

**தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்**
**ஆலயம் திறந்திருக்கும் நேரம்**

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

**Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480**

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough




## திருக்குறள்

**பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. [322]**

தன்னிடம் உள்ளதைத் தான் மட்டும் உண்ணாது, பிறருக்கும் பங்கிட்டுக் கொடுத்து உண்டு, உயிர்களைக் காப்பது, சான்றோர் தொகுத்துக் கூறியுள்ள அறங்களில் எல்லாம் உயர்ந்த அறமாகும்.

**பதவுரை:** பகுத்து – பிரித்துக் கொடுத்து, பல் – பலவாகிய, உயிர் – உயிர், ஓம்புதல் – குறிக்கொண்டு காப்பாற்றுதல், நூலோர் – நூல் படைத்தவர்கள், தொகுத்தவற்றுள் – (நன்னெறிகளாகத்) தொகுத்த கோட்பாடுகளுள், எல்லாம் – அனைத்தும், தலை – முதன்மை.

Vlambaram - April 01, 2025 new.qxp_Vlambaram-Front 2025-03-31 6:25 PM Page 10



# நானிலம் போற்றும் நட்பு - 63



– அகணி –
authorakani@gmail.com

இப்பொழுது திரிகடுகம் நூலின் தொண்ணூற்று ஏழாம் செய்யுளைக் கவனிப்போம்.

“ஐங்குரவர் ஆணை மறுத்தலும், ஆர்வு உற்ற
எஞ்சாத நட்பினுள் பொய் வழக்கும், நெஞ்சு அமர்ந்த
கற்பு உடையாளைத் துறத்தலும், இம் மூன்றும்
நற் புடையிலாளர் தொழில்.”

‘நற்புடை’ என்றால் ‘அறம்’ என்று பொருள் கொள்ளுமாறு உரையாசிரியர்கள் விளக்கம் தந்துள்ளனர்.

இந்தச் செய்யுளிற்கான பொருள் “பெரியோர்களுடைய கட்டளையை மறுத்து நடத்தலும், நண்பனிடம் பொய் பேசுதலும், கற்புடைய மனைவியைத் துறத்தலும், பாவச் செயல்கள் ஆகும்.” என்று உரையாசிரியர்கள் விளக்கம் கொடுத்துள்ளனர்.

இந்தச் செய்யுளில் புலவர் மூன்று விடயங்களைப் பாவச்செயல்களாகக் குறிப்பிடுகின்றார். இந்த அறிவுரையும் எக்காலத்தும் பொருந்தும் அறிவுரையாகவே உள்ளது.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நூற்றிஎண்பத்திமூன்றாம் பாடலைக் கவனிப்போம். இது ஔவையார் பாடிய பாட்டு. தலைவன் வராமையால் வருந்துவாளே என்று கவலைப்பட்ட தோழிக்குத் தலைவியுரைத்தது. இது முல்லைத்திணை சார்ந்தது.

“கார் காலத்திலே திரும்பி வந்து விடுவேன். அதுவரையிலும் தனிமைத் துன்பத்தைத் தாங்கிக் கொண்டிரு” என்று சொல்லிவிட்டுப் பொருள் தேடச் சென்றான் தலைவன். அவன் தவணை சொல்லிய கார் காலம் வந்து விட்டது. ஆனால் அவன் மட்டும் வரவில்லை.

இதைக்கண்ட தோழி, தலைவன் வராமையால், தலைவி வருந்துவாள் என்று நினைத்தாள். தலைவியின் துன்பத்திற்காகத் தானும் வருந்தினாள். தோழியின் துக்கத்தைக் கண்ட தலைவி அவளுக்குத் தனது நம்பிக்கையை எடுத்துரைத்தாள்.

“சென்ற நாட்ட கொன்றை அம்பசுவீ
நம்போல் பசக்கும் காலைத் தம்போல்
சிறுதலைப் பிணியின் தீர்ந்த நெறி கோட்டு
இரலை மானையும் காண்பர் கொல் நமரே
புல் என் காயாப் பூக்கெழு பெரும் சினை
மெல் மயில் எருத்தின் தோன்றும்
கான வைப்பின் புன் புலத்தானே.”

இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.
“மழை பெய்வதற்கு முன்னே காயாவின் கிளைகள் வெறிச் சென்றிருக்கும். மழை பெய்தபின் அவற்றிலே பூக்கள் நிறைந்து மலர்ந்திருக்கும். அவை மயிலின் கழுத்தைப் போல் காணப்படும். இத்தகைய புன்செய் நிலமுள்ள அவர் சென்றிருக்கும் நாட்டிலே, முல்லை நிலத்திலே கொன்றை மரங்களும் பூத்துக் குலுங்கியிருக்கும். அம்மலர்கள், அவர் பிரிந்த பின் நம்மைக் கவ்விய பசலை நிறத்தை அவருக்கு நினைப்பூட்டும். அன்றியும் அவரைப்போல் தனியாகத் திரிந்து கொண்டிருக்கும் ஆண் மானைக் காணமாட்டார். தன் பிணையுடன் இணைந்து திரியும் இரட்டை மான்களையே காண்பார். ஆதலால், இக்காட்சிகள், அவரை நம்மிடம் திரும்பி வரச் செய்துவிடும்.” என்று தலைவி கூறினாள்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நூற்றிஎண்பத்திநான்காம் பாடலைக் கவனிப்போம். இது ஆரிய அரசன் யாழ்ப்பிரமதத்தன் என்னும் புலவர் பாடிய பாட்டு. இவன் தமிழ் நாட்டிலே குடியேறிய ஒரு சிற்றரசனாக இருக்க வேண்டும். இந்த வடநாட்டு மன்னன் தமிழ்ப் புலவன் யாழ் வாசிப்பதிலே வல்லவன் இசைக் கலையிலே தேர்ந்தவன். இவனுடைய பெயர் இவ்வுண்மையை விளக்குகின்றது. இவனுடைய இயற்பெயர் பிரமதத்தன்.

தன்னைக் கண்டித்துரைத்த பாங்கனைப் பார்த்துத் தலைவன் கூறியது. இச்செய்யுள். இது நெய்தல் திணை சார்ந்தது.

வேட்டைக்குச் சென்ற தலைவன், விலங்குகளை வேட்டையாடவில்லை. காதல் வேட்டையாடிவிட்டான். ஓர் அழகிய மங்கையின் காதலிலே ஈடுபட்டுத் திரும்பினான். தன் காதலைப் பற்றித் தோழனிடம் கூறினான். தோழன் உடனே அவனைக் கண்டித்தான். “மன உறுதியும், உடல் வலிமையும் உள்ளவன் நீ. எங்கேயோ போனவிடத்தில், யாரோ ஒரு பெண்ணிடம் உள்ளத்தைப் பறி கொடுத்தேன் என்று உரைத்தாய். உன் ஆண்மைக்கு அழகாகுமா? அறிவுடைமைக்கு ஏற்றதாகுமா?” என்று கடிந்துரைத்தான்.

தோழனுடைய கடிந்துரையைக் கேட்ட தலைவன் “நான் கண்ட காரிகை பரதவர் பெண். அவள் அழகு நிறைந்தவள். என் நெஞ்சம் அவளுடைய கண் வலையிலே சிக்கிக் கொண்டது. அவளிடமே தங்கிவிட்டது, நான் என்ன? யாராயிருந்தாலும் அவளைக் கண்டால் அவள் கண் வலையிலே வீழ்ந்துதான் தீரவார்கள். இது நான் நேரில் கண்ட உண்மை. ஆதலால் அவள் நடமாடும் இடத்திற்கு யாரும் போக வேண்டாம். போனால் கட்டாயம் துன்பப்படுவார்கள்” என்று உரைத்தான் தலைவன். இந்த நிகழ்ச்சியை எடுத்துக்காட்டுவதே இச்செய்யுள்.

‘தான் நேரில் பார்த்ததை மறைத்துப் பொய் பேசுந் தன்மை அறிவில் சிறந்தவர்களிடம் இல்லை. ஆதலால் நான் கண்ட உண்மையை உரைக்கின்றேன், கேட்பாயாக, என்னுடைய சிறந்த மாசற்ற மனம் ஒன்றையும் நினைக்கவேயில்லை. இதற்கு இது தகுந்ததா? தகாதா? என்று சிந்தித்துப் பார்க்கவேயில்லை அந்தக் கண் வலையிலே அகப்பட்டுக் கொண்டது. அங்கேயே தங்கி விட்டது.

“அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை
குறுகல் ஓம்புமின் சிறுகுடிச் செலவே
இதற்கு இது மாண்டது என்னாது, அதன்பட்டு
ஆண்டு ஒழிந்தன்றே மாண்தகை நெஞ்சம்
மயில்கண் அன்ன மாண் முடிப்பாவை
நுண்வலைப் பரதவர் மடமகள்
கண்வலைப் படூஉம் கான லானே”.

> "A friend is someone who knows all about you and still loves you."
> Elbert Hubbard

இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.
“அவள் மயிலிறகின் கண்களைப் போன்ற சிறந்த தலை மயிரையுடையவள் அழகிய பதுமை போன்றவள் வலை வீசி மீன்பிடிக்கும் தொழிலையுடைய பரதவர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவள் இளமையும் அழகும் நிறைந்தவள் யாராயிருந்தாலும் அவளுடைய கண் வலையிலே மாட்டிக் கொள்ளாமல் தப்பித்துக் கொண்டு போய்விட மாட்டார்கள். ஆதலால் கடற்கரைச் சோலையின் பக்கத்திலே உள்ள, சிற்றூர்க்குச் சென்று சேர்வதற்கு யாரும் விரும்ப வேண்டாம். சென்றால் எனக்கு நேர்ந்த துன்பந்தான் அவர்களுக்கும் உண்டாகும்”.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நூற்றிஎண்பத்திஐந்தாம் பாடலைக் கவனிப்போம். ஒரு நாள் தலைவியின் நெஞ்சிலே ஒரு நினைப்பு எழுந்தது. “தலைவன் இரவுக் காலத்தில் வந்து போகின்றான். அவன் வந்து போகும் வழியிலே எத்தனையோ ஆபத்துக்கள் உள்ளன. அவற்றால் தலைவனுக்கு இடையூறு நேர்ந்தால் என்ன செய்வது? என்பது தான் அந்த நினைப்பு” அவள் முகம் வேறுபட்டது.

தலைவியின் இந்த வேறுபாட்டைக் கண்டாள் தோழி. “இரவிலே தலைவன் தவறாமல் வருகின்றான். உன்னுடன் அளவளாவுகின்றான். இதனால் மகிழ்ச்சியடைந்திருக்க வேண்டிய நீ ஏன் துக்கத்துடன் தோன்றுகின்றாய்” என்றாள்.

“நுதல் பசப்பு இவர்ந்து, திதலை வாடி,
